சுருக்கம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 2021–2022 ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்புகள் – ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மை திட்டத்தினை (IFHRMS) செயல்படுத்திட பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககங்கள் மற்றும் 38 மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகங்களுக்கு கணினிகள் மற்றும் உபகரணங்கள் வழங்க நிதி ஒப்புதல் வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத் (சிநஆபி2) துறை

அரசாணை (நிலை) எண்.43 | நாள் 03.06.2022

திருவள்ளுவர் ஆண்டு 2053
சுபகிருது, வைகாசி–20

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.2, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (சிநஆபி) துறை, நாள் 05.01.2022.
2. பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் கடித எண்.அ3/5640/2021, நாள் 01.02.2022 மற்றும் 27.04.2022.

*********

ஆணை:–

மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் மாண்புமிகு பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களின் 2021–2022–ஆம் ஆண்டிற்கான அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மை திட்டத்தினை (IFHRMS) விரைந்து செயல்படுத்தும் பொருட்டும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககங்கள் மற்றும் 38 மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகங்களுக்கு 120 கணினிகள், 96 தடையில்லா மின் வழங்கிகள் (UPS), 54 அச்சுப்பொறி இயந்திரங்கள் எல்காட் (Elcot) நிறுவனம் மூலம் வாங்கிட ரூ.83,56,982/– க்கு நிர்வாக ஒப்பளிப்பு செய்து அரசால் ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதங்களில் கணினிகள் மற்றும் உபகரணங்களை கொள்முதல் செய்து வழங்கக் கோரி எல்காட் நிறுவனத்தாருக்கு கொள்முதல் ஆணை (purchase order) வழங்கப்பட்டது எனவும் ஆனால் எல்காட் நிறுவன துணை மேலாளரிடமிருந்து பெறப்பட்ட கடிதத்தில் மேற்படி பொருட்களை கொள்முதல் செய்து வழங்குவதற்கு அந்நிறுவனத்தாருக்கு 100% நிதி ஒப்பளிப்பு செய்து வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும் பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. எனவே, எல்காட் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட கடிதத்தின் அடிப்படையில், பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககங்கள் மற்றும் 38 மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகங்களுக்கு 120 கணினிகள், 96 தடையில்லா மின் வழங்கிகள் (UPS) மற்றும் 54 அச்சுப் பொறி இயந்திரங்கள் ஆகியவற்றை கொள்முதல் செய்ய ரூ.83,56,982/– க்கு நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் அரசைக் கோரியுள்ளார்.

4. பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து, அதனை ஏற்று, ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மை திட்டத்தினை (IFHRMS) செயல்படுத்தும் பொருட்டு பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககங்கள் மற்றும் 38 மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகங்களுக்கு120 கணினிகள், 96 தடையில்லா மின் வழங்கிகள் (UPS) மற்றும் 54 அச்சுப்பொறி இயந்திரங்கள் ஆகியவற்றை கொள்முதல் செய்ய ரூ.83,56,982/– (ரூபாய் எண்பத்து மூன்று இலட்சத்து ஐம்பத்தாறாயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்து இரண்டு மட்டும்)–க்கு நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

<u>பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககம் மற்றும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகங்கள் (ரூ.69,25,731/–)</u>

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்–001– நெறிப்படுத்துதலும், நிருவாகமும் – மாநிலச் செலவினங்கள்–AA– தலைமையிடப் பணியாளர் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் நல இயக்ககம்– 376 – கணினியும் துணைப்பாகங்களும் – 01– வாங்குதல்."

(IFHRMS DPC 2225-03-001-AA-37601)

<u>மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககம் ரூ.14,31,251/–)</u>

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்–001– நெறிப் படுத்துதலும், நிருவாகமும் – மாநிலச் செலவினங்கள்–BA– தலைமையிடப் பணியாளர்– மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககம் – 376 – கணினியும் துணைப்பாகங்களும் – 01 – வாங்குதல்".

(IFHRMS DPC 2225-03-001-BA-37601)

6. இவ்வரசாணை நிதித்துறையின் ஒப்புதலை அதன் அலுவல் சார்பற்ற எண்.24095/நிதி (பி.மி.பி(ம)சிந)/2022, நாள் 30.05.2022 –இல் பெற்று வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஆ.கார்த்திக்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
ஆணையர்,
பிற்படுத்தப்பட்டோர் நலன், சென்னை–05.
ஆணையர்,
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்,
சென்னை–05.
இயக்குநர்,
சிறுபான்மையினர் நலன், சென்னை–05.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–08.
மாநில கணக்காயர், சென்னை–18.

நகல் :–
மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நல அமைச்சரின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–09.
அரசு முதன்மைச் செயலாளரின் முதன்மை தனிச் செயலர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை–09.
அரசு சிறப்புச் செயலாளரின் நேர்முக எழுத்தர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை–9.
நிதி (பி,மிபி(ம)சிந/வ.செ.பொ.II)த் துறை,
தலைமைச்செயலகம், சென்னை–09.
இருப்புக் கோப்பு / உபரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

3/6/22
**பிரிவு அலுவலர்**